செ.வெ.எண். 09. நாள்: 04.02.2020

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (2019 —— 2020) கல்வியாண்டில்- 104 அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 13,930 - மாணவ மாணவியர்களுக்கு ரூ. 3 கோடியே 44 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் பணிகளை மாண்புமிகு பள்ளி கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் துவக்கி வைத்து மாணவ மாணவியர்களுக்கு மிதி வண்டிகளை வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அதியமான் பொறியியல் கல்லூரியில் ( 03.02.2020) அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு பள்ளி கல்வித்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.சு.பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் முன்னிலை வகித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் (2019 —— 2020) 104 அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 13,930 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 3 கோடியே 44 லட்சத்து 46 ஆயிரம் மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது. அதேப்போல 12- ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ( 2019 —— 2020 ) கல்வியாண்டில் 24 ஆயிரத்து 283 மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினிகள் ரூ. 30 கோடியே 11 லட்சத்து 9 ஆயிரத்து 200 மதிப்பில் வழங்கப்படவுள்ளது. மேலும் 6 முதல் 10 வகுப்பு பயிலும் 35 ஆயிரத்து 788 மாணவ மாணவியர்களுக்கு அரசின் கணித உபகரண பெட்டிகள் வழங்கப்படவுள்ளது. 1 முதல் 10 வரை பயிலும் 2 லட்சத்து 22 ஆயிரத்து 569 மாணவ மாணவியர்களுக்கு அரசின் விலையில்லா புத்தகபை வழங்கப்படவுள்ளது. 1 முதல் 10 வரை பயிலும் 16 ஆயிரத்து 03 மாணவ மாணவியர்களுக்கு புவியியல் வரை படம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மக்களவை துணை தலைவர் டாக்டர்.மு.தம்பிதுரை, முன்னாள் அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணாரெட்டி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.அசோக்குமார், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி.மனோரஞ்சிதம் நாகராஜ், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.இராஜேந்திரன், முதன்மை கல்வி அலுவலர் திரு.இரா.முருகன்,மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள்தொடர்பு அலுவலகம் கிருஷ்ணகிரி.